# உடன்பிறப்பே... 42

**தி.மு.க. என்பது எதிரிகளால் அழிக்கமுடியாத இரும்புக்கோட்டை. இந்தக் கோட்டையைக் கட்டியெழுப்பி, இயக்க வரலாற்றில் இடம்பிடித்த தீரர்கள் சிலரை, வாரா வாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், இந்த வாரம், பெரியார்-அண்ணா-கலைஞருடன் பயணித்து கழகம் வளர்த்த சிவகங்கை இராசேந்திரன் அவர்களைப் பற்றிப் பார்ப்போம்.**

## மொழிப்போரின் மாணவத் தீப்பந்தம் சிவகங்கை இராசேந்திரன்



ஓவியம் : ரவி பேலட்

**குண்டடிபட்டு வீழ்ந்த அவர், இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போரின் விதையாக மாறி நின்றார்.**

1964 ஆம் ஆண்டு, டிசம்பர் 14 ஆம் தேதி. ‘மெயில்’ நாளிதழ் ஒரு செய்தியைப் பகிர்ந்தது. “அரசியலமைப்புச் சட்டப்படி, ஆங்கிலத்தை மாற்றிவிட்டு, இந்தி ஆட்சி மொழியாவதற்கு இன்னும் இரண்டு வாரங்களே இருப்பதால், மைய மற்றும் மாநில அரசுகள் இந்தி மொழிக்கு மாறுவதற்கான திட்டத்தை இறுதியாக்கிவிட்டன” என அந்தச் செய்தி கூறியது.

1965 ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் நாள் முதல், மைய அரசின் எல்லா பணிகளிலும் இந்தி பயன்படுத்தப்பட வேண்டும் என 1964 டிசம்பர் 5ஆம் நாள் ஒன்றிய உள்துறை அமைச்சக சுற்றறிக்கை ஒன்று தெரிவித்திருந்தது.

அதற்கு முன் ஓராண்டாக ‘சட்டநகல் எரிப்புப் போராட்டம்’, ‘மறியல் போராட்டங்கள்’ என தமிழ்நாட்டில் இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தை நடத்தி வந்த தி.மு.கழகம், இந்தி ஆட்சி மொழியாகும் நாளை கடுமையாக எதிர்க்க முடிவு செய்தது. போராட்டத்தின் தலைமைப் பொறுப்பு முத்தமிழறிஞர் கலைஞர் கைகளில். அவரிடமிருந்து மாணவர்கள் கைகளில் பற்றிப் படர்ந்த அந்தப் போரில், முதல் களப்பலியாக துப்பாக்கிக் குண்டுக்குப் பலியானவர் சிவகங்கை இராசேந்திரன்.

‘மொழிப்போர் நாள்’ நினைவுகூரப்படும் ஒவ்வொரு ஆண்டும் இந்த வார ‘உடன்பிறப்பே’ இராசேந்திரன் அவர்களின் தியாகம் போற்றப்படும். மொழிக்கு உரிமைக் குரல் கொடுத்து, அவர் உடல் மண்ணில் வீழ்ந்த நாள் 1965 ஆம் ஆண்டு ஜனவரி 27 ஆம் தேதி. தி.மு கழகம் களப்பணி வீரர்களை மட்டும் போற்றுவதில்லை. களப்பலி வீரர்களையும் இதயத்தில் ஏந்தி நிற்கும் இயக்கமாக உயர்ந்து நிற்பதை இராசேந்திரன் அவர்களின் காலத்தில் இருந்தே பார்க்கலாம்.

### இந்தி ஆதிக்க எதிர்ப்பு

எந்த மொழியையும், எத்தகைய மொழியையும் யாரும் படிக்கலாம். அது அவரவர் விருப்பம். ஆனால், தாய்மொழி இல்லாத இன்னொரு மொழியைக் கட்டாயமாகப் படிக்கச் சொல்லித் திணிப்பது வன்முறை. கொடூரம். தாய்மொழியாகத் தமிழில் எல்லா பாடங்களையும் படிக்கலாம். உலக இணைப்பு மொழியான ஆங்கிலத்தை ஒரு பாடமாகப் படிக்கலாம் என்றிருந்த நிலையில், தமிழ்நாட்டில் இந்தி கட்டாயமாகப் படிக்க வேண்டும் என்று 1938 ஆம் ஆண்டிலிருந்தே தமிழர்கள் மீது ஆதிக்கம் செலுத்தப்பட்டது. தந்தை பெரியார் போன்ற தலைவர்களாலும் எண்ணற்ற தமிழ் மறவர்களாலும் எழுந்த வீரம் செறிந்த எதிர்ப்பினால் அப்போது இந்தித் திணிப்பு கைவிடப்பட்டது.

ஆனாலும், தொடர்ந்தபடியே இருந்த இந்தி ஆதிக்கத்துக்குத் தமிழ்நாட்டில் முடிவுரை எழுதியது 1965 மொழிப்போர்தான். தி.மு.கழகமே அந்தப் போரை மிக வீரியமாக நடத்தியது. 1938 இல் இந்தியைத் திணித்த ராஜாஜிகூட, இம்முறை இந்தித் திணிப்பை எதிர்த்தார். அந்த ஆண்டு குடியரசு நாளை துக்கநாளாக அறிவித்து, தமிழ்நாடெங்கும் கழகத்தினர் வேலை நிறுத்தமும், கண்டன ஊர்வலமும் நடத்த அறைகூவல் விடுத்தார் பேரறிஞர் அண்ணா. கழகத்தினரின் போராட்டங்கள் எல்லாம் பொதுமக்கள், மாணவர்கள் என அனைவரும் பங்குபெற்ற உரிமைப் போராக மாறியது. ஒரு கட்டத்தில் கழகத்தின் கையிலிருந்து இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போராட்டம் மாணவர்கள் மத்தியில் கைமாறியதைச் சொல்கிறது வரலாறு.

### சிதம்பரத்தில் காரைக்குடி இளைஞர்

சிதம்பரம் அண்ணாமலை நகரில், அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் இருந்து சுமார் மூன்றாயிரம் மாணவர்கள் கருப்புக் கொடி ஏந்தியபடி ஒரு படையணியாக, இந்தித் திணிப்பு எதிர்ப்பு முழக்கங்களுடன் புறப்படுகின்றனர். அது மாணவர் தி.மு.க.வின் எழுச்சி மிகுந்த படை.

குடியரசு தினத்தன்று நகருக்குள் ஊர்வலத்தை அனுமதிக்க முடியாது என காவலர்கள் கூற, மாணவர்கள் விடுதிக்குத் திரும்பி அடுத்த நாள் ஊர்வலத்தில் எடுத்துச் செல்ல வேண்டிய பதாகைகளைத் தயார்செய்து கொண்டிருக்கின்றனர். அவர்களில் துடிப்பான இளங்காளையாகப் பணியாற்றியவர் இராசேந்திரன். பல்கலைக் கழக மாணவர் தலைவராகவும் இருந்தார் ராஜேந்திரன்.

காரைக்குடி அருகில் உள்ள கல்லல் என்கிற ஊரைச் சேர்ந்தவர் இராசேந்திரன். இவரது தந்தை முத்துக்குமார் காவல்துறையில் பணியாற்றியவர். தாயார் வள்ளிமயில். 1947 ஆம் ஆண்டு, நாடு சுதந்திரம் பெறுவதற்கு ஒரு மாதம் முன்னதாக ஜூலை 16 ஆம் தேதி பிறந்தவர். ஓரளவு பொருளாதார வசதி கொண்ட குடும்பம் என்பதால், இராசேந்திரன் கல்வி கற்பதில் அவரது பெற்றோர் தீவிரம் காட்டினர். இராசேந்திரனுடன் சக்திவேல், மேனகா, தைலம்மாள், சகுந்தலா, சேகர், கீதா என உடன்பிறந்தோர் ஆறு பேர்.

அவரது பள்ளிக்கல்விக்குப் பின்னர், உயர்படிப்புக்காக மதுரை செந்தமிழ்க் கல்லூரியில் சேர விண்ணப்பம் செய்தார். அங்கு இடம் கிடைக்கவில்லை என்பதால், சிதம்பரம் அண்ணாமலை நகரில், இளம் அறிவியல் பாடப்பிரிவில் கணிதப் பட்டப்படிப்பில் சேர்க்கப்பட்டார்.

### சிதம்பரம் அரசியல் களம்

அவர் கல்லூரியில் சேர்ந்த காலத்தில்தான், மொழி ஆதிக்கத்துக்கு எதிரான போராட்டம் வீரியமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. 1940 களில் ‘பகுத்தறிவு இளைஞர் கழகம்’ கண்டிருந்த அண்ணாமலை பல்கலைக்கழகம், 1965 ஆம் ஆண்டில் மாணவர் தி.மு.க செயல்படும் களமாகவும் விளங்கியது. கல்வியுடன் அரசியலையும் பயிற்றுவித்த அந்தப் பல்கலையில் சேர்ந்த சில நாட்களில் அரசியல் ஆர்வத்துடன் களப்பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார் இராசேந்திரன். அந்தச் சூழலில்தான் இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம் மாணவர் போராட்டமாக தமிழ்நாட்டில் உருவானது. அதன் முக்கிய மையமாக அண்ணாமலை பல்கலைக்கழகமும் இருந்தது.

ஜனவரி 26க்கு அடுத்த நாள் மொழி உணர்வு கொண்ட அந்த மாணவர் படை பேரணியாகப் புறப்பட்டது. மூன்றாயிரம் மாணவர்களும் பதாகைகளை ஏந்தியபடி முழக்கமிட்டு சென்றனர். பேரணியைக் கலைக்கத் தயாரான காவல்துறையினர், மாணவர்கள் மீது கற்கள், தடியடித் தாக்குதல் நடத்தத் தொடங்கினர். மாணவர் படையில் முன்னணியில் முழக்கமிட்டுக் கொண்டே வருகிறார் சிவகங்கை இராசேந்திரன். தாக்குதலைச் சமாளிக்க முடியாமல், நாலாபக்கமும் மாணவர்கள் சிதறி ஓடினர். மாணவர்களின் மண்டை உடைக்கப்பட்டு, கை கால்கள் சேதமடைந்து விழுந்து கொண்டிருந்தனர். அப்போதுதான், திடீரெனத் துப்பாக்கித் தோட்டாவின் சத்தம் கேட்டது.

மாணவர்களைக் குறி பார்த்து போலீசார் சுடத் தொடங்கினர். ஆசிரியர்கள் குடியிருப்புப் பகுதி அருகே குண்டு துளைக்கப்பட்டு விழுந்து கிடக்கிறார் ஒரு மாணவர். அது மாணவர் தி.மு.க.வின் உடன்பிறப்பு இராசேந்திரன்.

தமிழ் காக்கும் போராட்டத்தில் தோட்டாவை நெஞ்சில் வாங்கி இருந்தார் சிவகங்கை வேங்கை ராசேந்திரன். சக மாணவர்கள் வெள்ளைச் சட்டையைக் கழற்றிப் பதாகை ஒன்றில் சுற்றி, போலீசாருக்கும் சமாதானம் காட்டியபடி, அவரது உயிரற்ற உடலை உலகுக்கு அறிவிக்கிறார்கள்.

### விதைக்கப்பட்ட உடல்

அவரது உடல், அருகில் உள்ள பரங்கிப்பேட்டையில் அடக்கம் செய்யப்பட்டது. இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தில் குண்டடிபட்டு வீழ்ந்த அவர், இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போரின் விதையாக மாறி நின்றார். மொழிக்கான போராட்டம் தமிழ்நாடு முழுவதும் கட்டுக்கடங்காமல் பரவியதற்கு இராசேந்திரன் உடலே தீப்பந்தமாக எரிந்தது என அந்த வரலாற்றை அறிந்தவர்கள் எழுதுகின்றனர்.

1967 ஆம் ஆண்டு கழக ஆட்சி அமைந்ததும், அண்ணாமலை பல்கலைக்கழக வளாகத்தில் சிலை அமைக்க விரும்பினார் பேரறிஞர் அண்ணா. ஆனால், பல்கலைக்கழக நிர்வாகம் இடம் அளிக்கவில்லை. அப்போது பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்த கலைஞர், நெடுஞ்சாலைத் துறை மூலம் பல்கலைக்கழக முகப்புவாயில் அருகே சிலை அமைக்க இடம் ஒதுக்கினார். சிலை அமைப்புக்குழுத் தலைவராக இருந்தவர் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளராக இருந்த எஸ்.டி.சோமசுந்தரம். 1969 ஆம் ஆண்டு எழுப்பப்பட்ட அந்தச் சிலையைத் திறந்து வைத்தார் முதலமைச்சர் கலைஞர்.

ஆண்டுதோறும் மொழிப்போர் நாள் நினைவுக்குப் பின்னர், 27 ஆம் தேதி அவரது சிலைக்கும், அடக்கம் செய்யப்பட்ட பரங்கிப்பேட்டையிலும் கழகத்தினர் அரசியல் முழக்கம் எழுப்பி, அவர் ஈகையைப் போற்றுகின்றனர். இப்போதும் மொழிப்போர்க் களத்தில் சமர் புரியும் வீரனாக எழுந்து நிற்கிறார் இராசேந்திரன். அவர் சிலை திறப்பின்போது வெளியிட்ட மலரில் கலைஞர் எழுதினார். அதுவே நம் உடன்பிறப்பின் நினைவாக விளங்கும்.

”மலையென உயர்ந்த தமிழின் உறுதிக்கு அவன் சிலை ஒரு சின்னமாக விளங்கும். ஆதிக்க வலை கிழிக்கும் வாளாய் அவன் சிலை விளங்கும். அவன் நினைவோ தமிழின் புகழ் ஒளிவிடுமட்டும் நிலைக்கும்”.

**...துடிக்கும்**

## மணம் வீசும் பெரியார்!

47-வது சென்னை புத்தகக் காட்சி நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில், ஜனவரி 3 முதல் 21-ஆம் தேதிவரை நடந்து முடிந்திருக்கிறது. இந்த ஆண்டு புத்தகக் காட்சியில் தனிநபர் ஒருவர் குறித்த நூல்கள் அதிகமான அரங்குகளில் விற்பனைக்கு இருந்தது என்றால், அது பெரியாரைப் பற்றிய நூல்கள்தான். சுமார் 60 க்கும் மேற்பட்ட அரங்குகளில், குறைந்தபட்சமாக ஒரு நூலாவது பெரியார் குறித்து விற்பனைக்கு இருந்தது.

கடந்த புத்தகக் காட்சி முதல் இந்த ஆண்டு புத்தகக் காட்சி வரையிலான காலத்தில் பெரியார் பற்றிய தலைப்பில் சுமார் 70 நூல்கள் வெளியாகியிருக்கின்றன. 2000-த்தின் தொடக்கம் வரை, புத்தகக் காட்சிகளில் பெரியார் குறித்த நூல்கள் ஒற்றை இலக்க எண்ணிக்கையிலான பதிப்பகங்களே விற்பனைக்கு வைத்திருக்கும். ஆனால், இப்போதோ பெரியார் நூல்களைப் பதிப்பிக்காத பதிப்பாளர்கள் கூட, பிற பதிப்பகங்களிடம் இருந்து பெரியார் நூல்களை வாங்கி அரங்குகளில் பார்வைக்கு வைக்கிறார்கள். பெரியார் நூல்கள் அரங்குகளில் இருந்தால், வாசகர்கள் நிச்சயம் உள்ளே வருவார்கள் என்ற எண்ணம் ஏற்படும் அளவுக்கு, இன்றைய இளம் தலைமுறை, பெரியார் நூல்களைத் தேடித்தேடிப் படிக்க ஆரம்பித்திருக்கிறது.

‘நீங்கள் பெரியாரை நேசிக்கலாம் அல்லது பெரியாரை எதிர்க்கலாம்; ஆனால், ஒருபோதும் அவரைப் புறந்தள்ள முடியாது’ என்பதைத்தான் இவை காட்டுகின்றன.

## :ப்ளாஷ்பேக்



### எளியவருக்கும் காட்சி தந்தவர்!

1989 தேர்தலுக்காக கோவை மாவட்டத்தின் சார்பில் நிதி வசூல் செய்த களப்பணியாளர்களுக்கு வாழ்த்துத் தெரிவிக்க, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வருகை தந்தார். தலைவர் கலைஞருடன் பொருளாளர் சாதிக் பாட்சா மற்றும் கோவை மாவட்டச் செயலாளர் மு.கண்ணப்பன் ஆகியோர் உள்ளனர்.



தமிழ்ப்பித்தன்

அந்த நேரத்தில் நான் கோவை மாவட்டம், கிணத்துக்கடவு ஒன்றிய தி.மு.க இளைஞர் அணி அமைப்பாளராக இருந்தேன். இந்த எளியவனுக்கும் புகைப்படத்துக்காகக் காட்சி தந்து தலைவர் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தினார்.

**-கோவை தமிழ்ப்பித்தன்,
தலைமைக் கழகப் பேச்சாளர்,
கிணத்துக்கடவு, கோவை மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப் படங்களை சிறு குறிப்புடன் எங்க ளுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### தேசிய முன்னணித் தொடக்கம்!

**1988 ஆம் ஆண்டு, இந்திய அளவில் ஒரு மாற்று ஏற்பாட்டைக் காண வேண்டும் என்பதற்காக, டெல்லியில் ஏழு கட்சித் தலைவர்கள் கூடி ‘தேசிய முன்னணி’யை உருவாக்கினர். அந்தக் கூட்டமைப்பை உருவாக்கியவர்களில் முக்கிய அங்கமாக இருந்தார் கலைஞர். தேசிய முன்னணியின் தொடக்க விழா சென்னையில், செப்டம்பர் 17-ஆம் தேதி கழகத்தின் முப்பெரும் விழாவுடன் இணைந்து நடத்தப்பட்டது. அந்த நிகழ்ச்சியின்போது சென்னையில் இருந்த எழுச்சியினைப் பார்த்து தேசிய முன்னணித் தலைவர்கள் மெய் மறந்தனர்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 370




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131